மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்தூர்

முன்னிலை: திரு.பி. ஜெய்சங்கர், பி.ஏ., எம்.எல்.,

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் ஆத்தூர்

**2024** ம் ஆண்டு ஜீலை திங்கள் **4** ஆம் நாள் வியாழக்கிழமை

CC.No. 204/2022

TNDG180004152019

| | | | |
|---|---|---|---|
| 1) | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றஎண். | : | அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,<br>கன்னிவாடி காவல்நிலையம்,<br>குற்ற எண். 85/2021 |
| 2) | எதிரிகளின் பெயர் | : | 1. கோட்டைமுனியப்பன், வயது 31<br>த.பெ. முனியப்பன்,<br>2. சரவணன், வயது 29<br>த.பெ. பெருமாள்<br>கன்னிவாடி<br>ஆத்தூர் தாலுகா,<br>திண்டுக்கல் மாவட்டம் |
| 3) | எதிரிகளின் தந்தை பெயர் | : | |
| 4) | எதிரிகளின் ஜாதி அல்லதுஇனம் | : | |
| 5) | எதிரிகளின் தொழில் | : | |
| 6) | எதிரிகளின் முகவரி | : | |
| 7) | எதிரிகளின் வயது | : | |
| 8) | குற்ற நிகழ்வு நாள் | : | 05.08.2021 |
| 9) | புகார் தேதி | : | 09.08.2021 |
| 10) | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | : | 09.08.2021 |
| 11) | எதிரிகள் பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | | 18.09.2021 |
| 12) | விசாரணை ஆரம்பிக்கப்பட்டநாள் | | 05.04.2024 |
| 13) | விசாரணை முடிக்கப்பட்ட நாள் | : | 25.06.2024 |
| 14) | தண்டனை மற்றும் உத்தரவு | : | எதிரிகள் மீது சட்டப்பிரிவு 379 இதசவின் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படாததால், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை மேற்படி பிரிவுகளின்கீழ் குற்றவாளிகள் இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரிகளை குவிமுச 248(1) பிரிவின்கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.இவ்வழக்கு சொத்தான RPR.No. 85/2021 இல் கண்டுள்ள 5HP மோட்டார் மற்றும் Passion Pro இருசக்கரவாகனம் ஆகியவற்றை அதன் உரிமையாளர்கள் ஏற்கனவே பெற்றுச் |

| | | | |
|---|---|---|---|
| | | | சென்றுள்ளதால் மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின்னர் அவற்றை அவர்களே வைத்துக் கொள்ளவும். அவர்கள் எழுதிக் கொடுத்துள்ள பிணை பத்திரத்தை ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகிறது. |
| 15) | காலதாமதத்திற்கான காரணம் | : | அரசுத்தரப்பு சாட்சிகளை விசாரிப்பதில் காலதாமதம் |

இந்த வழக்கு 15.12.2022 ஆம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் கற்றறிந்த குற்றவியல் உதவி அரசு வழக்கறிஞர் நிலை I திரு. வாசன் அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. வினோத்குமார் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

<u>தீர்ப்புரை</u>

கன்னிவாடி காவல்நிலைய குற்ற எண். 85/2021 காவல் உதவி ஆய்வாளரால் புலன் விசாரணை செய்யப்பட்டு எதிரிகள் மீது சட்டப்பிரிவு 379 இ.த.ச.வின் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்ற செயல் புரிந்துள்ளதாக சட்டப்பிரிவு 173(2) கு.வி.மு.ச-வின் கீழ் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் எழுந்த வழக்காகும்.

1) குற்ற இறுதி அறிக்கை:-

1) நிகழ்நிலைபுகார்தாரரான பாலசுப்பிரமணி என்பவரின் ஊருக்கு மேற்கே பஞ்சந்தாங்கி கரை அருகில் நிகழ்நிலைபுகார்தாரருக்கு சொந்தமான தோட்டத்தில் 5 H.P. நீர்மூழ்கி மின்மோட்டார் பகுதுநீக்கி வைத்திருந்ததை கடந்த 05.08.2021 ஆம் தேதி 17.00 மணிக்கு இவ்வழக்கின் எதிரிகள் இருவரும் சேர்ந்து 05.08.2021 ஆம் தேதி இரவு 21.00 மணிக்கு TN 57 AK 6282 என்ற PASSION PRO இருசக்கரவாகனத்தை பயன்படுத்தி திருடிச் சென்றுவிட்டதாகவும், எனவே, எதிரிகள் சட்டப்பிரிவு 379 இதசவின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கன்னிவாடி காவல்நிலைய சார்பு ஆய்வாளரால் 10.09.2021 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மேற்படி குற்ற இறுதி அறிக்கையில் எதிரிகளுக்கு எதிராக முதல் தோற்ற வழக்கு எழுந்ததால் வழக்கானது இந்நீதிமன்றத்தில் 15.12.2022 அன்று கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எதிரிகள் பிணையில் இருந்ததால் அவர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையான பின்னர் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் எதிரிகளுக்கு பிரிவு 207 குற்ற விசாரணை நடைமுறைச் சட்ட பொருண்மைகளுக்கு இணங்க இலவசமாக வழங்கப்பட்டது.

3. எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் கொடுத்து குற்ற இறுதி அறிக்கையில் கண்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்து 05.04.2024 அன்று

எதிரிகளின் மீது சட்டப்பிரிவு 379 இ.த.ச.வின் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் புரிந்துள்ளதாக குற்றச்சாட்டு வனைந்து குற்றச் சாட்டுகள் குறித்து விளக்கி கூறப்பட்டது. குற்றச் சாட்டின் சாராம்சம் குறித்து விளக்கி கேட்கப்பட்டபோது எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்து சாட்சி விசாரணை வேண்டினார்கள். எனவே, இவ்வழக்கில் சாட்சிகளின் விசாரணைக்காக உத்தரவிடப்பட்டது.

4. அதன் அடிப்படையில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசுத்தரப்பு சான்றுப் பொருட்கள் அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் எவ்வித சாட்சியமும் விசாரணை செய்யப்படவில்லை. அதே போல் எவ்வித சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

5. <u>அரசு தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களிலிருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு:-</u>

1). இவ்வழக்கின் நிகழ்நிலைபுகார்தாரரான அ.சா.1 பாலசுப்பிரமணி என்பவர் கடந்த 05.08.2021 அன்று மாலை 05.00 மணியளவில் மணியக்காரன்பட்டி பஞ்சாந்தாங்கிகரை அருகே உள்ள அவருக்கு சொந்தமான தோட்டத்தில் வைத்திருந்த

5H.P.நீர்மூழ்கி மோட்டார் திருடுபோய்விட்டதாக 09.08.2021 அன்று கன்னிவாடி காவல்நிலையம் ஆஜராகி கொடுத்த அ.சா.ஆ.1 ஆன புகார்மனுவை பெற்று, அன்றையதினமே காலை 11.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த சிறப்பு சார்பு ஆய்வாளர் தர்மர் என்பவர் காவல்நிலைய குற்ற எண். 476/2021, சட்டபிரிவு 379 இதசவின்படி அ.சா.ஆ-5 ஆன முதல் தகவல்அறிக்கை பதிவு செய்து, மேல்விசாரணைக்காக இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான காவல்ஆய்வாளர் தங்கராஜ் என்பவர் பார்வைக்கு வைத்ததன்பேரில் மேற்கண்ட காவல் ஆய்வாளர் இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டுள்ளார்.

2) மேற்கண்ட புலன்விசாரணை அதிகாரி அன்றையதினமே, பகல் 12.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் முத்துகிருஷ்ணன், தர்மராஜ் ஆகியோர் முனனிலையில், சம்பவ இடத்தைப் பார்வையிட்டு விசாரணை செய்து அ.சா.ஆ-6 ஆன மாதிரிவரைபடம் வரைந்து அ.சா.ஆ-7 ஆன பார்வைமகஜர் தயார் செய்துள்ளார். பின்பு மேற்கண்ட மகஜர் சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு சாட்சிகள் பாலசுப்பிரமணி, பத்மாவதி, மணிகண்டன் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அதன்பின்பு அன்றையதினமே பகல் 02.00 மணியளவில் இவ்வழக்கின் எதிரிகள் கோட்டைமுனியப்பன், சரவணன் ஆகியோரை கரட்டுப்பட்டி பஸ்ஸ்டாப் அருகே வைத்து கைது செய்து பகல் 02.10 மணிக்கு 1வது எதிரி கோட்டைமுனியப்பன் என்பவர்

தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தை சாட்சிகள் முருகேசன், மருதமுத்து ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார்.

3) மேற்கண்ட ஒப்புதல்வாக்குமூலத்தின் அடிப்படையில் 1 வது எதிரி அவரது வீட்டில்இருந்து ஆஜர்படுத்திய வழக்கு சொத்தான அ.சா.பொ.1 5 HP கம்பிரசர் மோட்டாரையும் அ.சா.பொ.2 ஆன மேற்கண்ட மோட்டாரை திருடுவதற்கு பயன்படுத்திய TN 57 AK 6782 என்ற பதிவெண் கொண்ட Passion Pro இருசக்கரவாகனத்தையும், மேற்கண்ட அதே சாட்சிகள் முன்னிலையில் அ.சா.ஆ.9 ஆன அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார். பின்பு எதிரிகளை நீதிமன்றக்காவலுக்கு அனுப்பிவைத்துள்ளார். வழக்கு சொத்துக்களை அ.சா.ஆ-10 ஆன படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளார். பின்பு வழக்கின் புலன்விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவு 379 இதசவின்படி 10.09.2021 அன்று குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

4). இவ்வழக்கில் கடந்த 25.06.2024 ஆம் தேதியில் அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் சாட்சியம் குறித்து அவற்றை கேள்விகளாக தொகுத்து சட்டப்பிரிவு 313(1) (ஆ) கு.வி.மு.ச.-வின் கீழ் வினவியபோது, எதிரிகள் அவற்றினை பொய் சாட்சி, பொய் வழக்கு என்று மறுத்துக் கூறினார்கள். தங்களது தரப்பில் விசாரிக்க வாய்மொழி சாட்சிகள் இல்லை என

கூறினார்கள். எனவே, எதிரிகள் தரப்பில் வாய்மொழி சாட்சிகள் யாரும் இல்லையென அன்றைய தினமே எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

<u>6). இவ்வழக்கில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை</u>**:-**

1). இவ்வழக்கில் எதிரிகள் மீது சட்டப்பிரிவு 379 இ.த.ச.வின் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

2) இருதரப்பு சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டதால், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. அரசு தரப்பு குற்றவியல் உதவி வழக்கறிஞர் அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்தும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்களில் இருந்தும், அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 சான்றுப்பொருட்களில் இருந்தும், எதிரிகள் மீது சட்டப்பிரிவு 379 இ.த.ச.வின் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்குமாறு வாதிட்டார்.

3). எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கில் தனிப்பட்ட கண்ணுற்ற சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை எனவும்,நிகழ்நிலைபுகார்தாரரான அ.சா.1 மோட்டாரை யார் திருடினார்கள் என்று தெரியாது என்றும், ஆஜர் எதிரிகள் தனது மோட்டாரை திருடவில்லை என்று சாட்சியம்

அளித்துள்ளதாகவும், இவ்வழக்கின் சான்றாவணங்களான பார்வைமகஜர், மற்றும் மாதிரி வரைபடம் மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்கள் ஆகியவை வழக்கிற்காக காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றும், அரசு தரப்பு தமது வழக்கை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை எனவும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

4) இவ்வழக்கின் நிகழ்நிலைபுகார்தாரரான அ.சா.1 பாலசுப்பிரமணியன் என்பவர் தமது சாட்சியத்தில் தன்னிடமிருந்து திருடுபோனதாக சொல்லப்படும் மோட்டாரை யார் திருடினார்கள் என்று போலீசார் தன்னிடம் சொல்லவில்லை என்றும், யார் திருடினார்கள் என்ற விபரம் தனக்கு தெரியாது என்றும் வழக்கு சொத்தான மோட்டாரை போலீசார் யாரிடமிருந்து கைப்பற்றினார்கள் என்று சம்பந்தப்பட்ட போலீசார் தன்னிடம் சொல்லவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளதில் இருந்து இவ்வழக்கின் எதிரிகள் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார்களா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்துவதுடன் எதிரிகள் தரப்பில் குறிப்பிடுவதுபோல பதிவு செய்யப்பட்ட வழக்கை முடித்து வைப்பதற்காக எதிரிகளை இவ்வழக்கில் புலன்விசாரணை அதிகாரி சேர்த்து குற்ற இறுதிஅறிக்கை தாக்கல்செய்துள்ளாரோ? என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

5) இவ்வழக்கின் நிகழ்நிலைபுகார்தாரரான அ.சா.1 இந்நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்த அன்று எதிரிகள் இருவரும் ஆஜராகியிருந்தும் அவர்

தமது சாட்சியத்தில் ஆஜர் எதிரிகள் தனது மோட்டாரை திருடவில்லை என்றும் ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளதில் இருந்து அ.சா.1 எதிரிகளுடன் சமாதானமாகி சென்றுவிட்டு, நீதிமன்றத்தில் பிறழ்சாட்சியம் அளிக்கிறாரோ? என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

6) இவ்வழக்கில் அரசுத்தரப்பில், ஒப்புதல்வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.2 மருதமுத்து என்பவர் அரசுத்தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். அவர் தமது சாட்சியத்தில் தானும், மற்றொரு அத்தாட்சி சாட்சியான முருகேசன் என்பவரும் கன்னிவாடி காவல்நிலையம் சென்றதாகவும், அப்போது காவல்நிலையத்தில் கையொப்பம் கேட்டதால் போட்டு கொடுத்ததாகவும் போலீசார் தன்னிடமும், முருகேசனிடமும் எழுதப்படாத வெள்ளைத்தாளில் கையொப்பம் வாங்கிக்கொண்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளதில் இருந்து எதிரிகளிடமிருந்து திருடுபோனதாக சொல்லப்படும் வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டதா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

7) மேலும், அ.சா.2 தமது சாட்சியத்தில் போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளதில் இருந்து இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி சம்பவயிடம் சென்று புலன்விசாரணை செய்தாரா? அவரது சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளது போல வழக்கு சொத்துக்களை எதிரிகளிடமிருந்து அவர் குறிப்பிடும் இடத்தில் கைப்பற்றி அதற்கான அத்தாட்சி தயார் செய்தாரா? என்ற சந்தேகத்தை

ஏற்படுத்துகிறது. மேலும், எதிரிகள் தரப்பில் குறிப்பிடுவதுபோல இவ்வழக்கின் பார்வைமகஜர் , மாதிரிவரைபடம் , சாட்சிகளின் வாக்குமூலம், அத்தாட்சி மற்றும் 1 வது எதிரியின் ஒப்புதல்வாக்குமூலம் ஆகியவற்றை வழக்கிற்காக நிலையத்தில் வைத்து தயார் செய்துகொண்டாரா? என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்துகிறது.

8) இவ்வழக்கில் அ.சா.3 ஆக விசாரணை செய்யப்பட்ட புலன்விசாரணை அதிகாரி இவ்வழக்கின் நிகழ்நிலைபுகார்தாரரான அ.சா.1 விடமிருந்து புகார்மனுவை பெற்று வழக்கு பதிவு செய்து புலன்விசாரணை மேற்கொண்டு சாட்சிகள் பாலசுப்பிரமணி, பத்மாவதி, மணிகண்டன் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து பார்வைமகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்து எதிரிகளை கைது செய்து 1 வது எதிரியின் ஒப்புதல்வாக்குமூலத்தின் அடிப்படையில் அவரிடமிருந்து திருடுபோன வழக்கு சொத்தை கைப்பற்றி எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்து வழக்குசொத்தை நீதிமன்றத்தில் ஆஜர் செய்து வழக்கின் புலன்விசாரணை முடித்து குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்திருந்தாலும், இவ்வழக்கின் நிகழ்நிலைபுகார்தாரரான அ.சா.1 மற்றும் ஒப்புதல்வாக்குமூல அத்தாட்சி சாட்சியான அ.சா.2 ஆகியோர் அரசுத்தரப்பு சாட்சியத்திற்கு விரோதமாக பிறழ்சாட்சியம் அளித்துள்ள நிலையில் மேற்கண்ட புலன்விசாரணை அதிகாரியின் சாட்சியம் அலுவல் முறையில் அளிக்கப்பட்ட சம்பிரதாய சாட்சியமாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

9) இவ்வழக்கின் நிகழ்நிலைபுகார்தாரரான அ.சா.1 மற்றும் ஒப்புதல்வாக்குமூலம் அத்தாட்சி சாட்சியான அ.சா.2 ஆகியோர் பிறழ்சாட்சியம் அளித்துள்ளதால் ஏனைய அரசுதரப்பு சாட்சிகளைக்கொண்டு வழக்கை நிரூபிக்க இயலாது எனகருதி அரசுத்தரப்பு பட்டியல் சாட்சிகள் 2 முதல் 8 வரையிலானவர்களை விசாரணை செய்வதில் இருந்து விலக்கிக்கொண்டுள்ள நிலையில், அரசுத்தரப்பில் விசாரணை செய்யப்பட்ட மேற்கண்ட அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் பிறழ்சாட்சியம் அளித்துள்ளதால் அலுவல் முறை சாட்சியான அ.சா.3 இன் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு எதிரிகள் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டதாக தீர்மானிக்க இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

10) அரசுத்தரப்பு சாட்சிய, சான்றாவணங்கள் வாயிலாக எதிரிகள் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிருபிக்கப்படவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, எதிரிகள் மீது சட்டப்பிரிவு 379 இதசவின் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படாததால், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

11). முடிவாக,

எதிரிகள் மீது சட்டப்பிரிவு 379 இதசவின் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படாததால், சந்தேகத்தின்பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை மேற்படி பிரிவுகளின்கீழ் குற்றவாளிகள் இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரிகளை குவிமுச 248(1) பிரிவின்கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இவ்வழக்கு சொத்தான RPR.No. 85/2021 இல் கண்டுள்ள 5HP மோட்டார் மற்றும் Passion Pro இருசக்கரவாகனம் ஆகியவற்றை அதன் உரிமையாளர்கள் ஏற்கனவே பெற்றுச் சென்றுள்ளதால் மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின்னர் அவற்றை அவர்களே வைத்துக் கொள்ளவும், அவர்கள் எழுதிக் கொடுத்துள்ள பிணை பத்திரத்தை ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக மொழிதல்செய்தும் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைத்திருத்தம்செய்யப்பட்ட பின்னர் இன்று **2024-**ம் ஆண்டு ஜீலை திங்கள் **4** ஆம் நாள் இந்நீதிமன்ற அவையில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்.திரு.பி.ஜெய்சங்கர்)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், ஆத்தூர்

<u>அரசுத் தரப்பு சாட்சிகள்</u>**:-**

| | |
|---|---|
| அ.சா.1 | பாலசுப்பிரமணியன் ( நிகழ்நிலைபுகார்தாரர்) |
| அ.சா.2 | மருதமுத்து |

| | |
|---|---|
| அ.சா.3 | சரவணன் ( புலன்விசாரணை அதிகாரி) |

<u>அரசுத் தரப்பு சான்றாவணங்கள்</u>

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார்மனு |
| அ.சா.ஆ.2 | திருடுபோன மோட்டாரின் புகைப்படம் |
| அ.சா.ஆ.3 | அத்தாட்சியில் உள்ள அ.சா.2 இன் சாட்சிக்கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | ஒப்புதல்வாக்குமூலத்தில் உள்ள அ.சா.2 இன் சாட்சிக்கையொப்பம் |
| அ.சா.ஆ.5 | முதல் தகவல்அறிக்கை |
| அ.சா.ஆ.6 | மாதிரிவரைபடம் |
| அ.சா.ஆ.7 | பார்வைமகஜர் |
| அ.சா.ஆ.8 | ஒப்புதல்வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.9 | அத்தாட்சி |
| அ.சா.ஆ.10 | படிவம் 91 |

<u>அரசுத் தரப்பு சான்றுப்பொருட்கள்</u>

அ.சா.பொ.**1 ..** 5 H.P.மோட்டார்

அ.சா.பொ.**2 ..** TN 57 AK 6282 என்ற Passion Pro இருசக்கரவாகனம்

<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் **:-** ------ இல்லை</u>

## <u>Case summary :-</u>

1) எதிரிகள் சிறையில் இருந்த நாட்கள் -- 09.08.2021 to 18.09.2021

(30 நாட்கள்)

2) குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் -- 10.09.2021

3) எதிரிகள் முதலாவதாக விசாரிக்கப்பட்ட நாள் -- 05.04.2024

4) எதிரிகள் மீதான குற்றச்சாட்டை விளக்கி கேட்ட நாள் --

5) இடைக்கால மனு விபரம் -- --

6) சாட்சிகள் விசாரணை நாள்

| | | | |
|---|---|---|---|
| அ.சா.1 – | முதல் விசாரணை | -- | 21.05.2024 |
| | குறுக்கு விசாரணை | -- | 21.05.2024 |
| அ.சா.2 – | முதல் விசாரணை | -- | 21.05.2024 |
| | குறுக்கு விசாரணை | -- | 21.05.2024 |
| அ.சா.3 – | முதல் விசாரணை | -- | 24.06.2024 |
| | குறுக்கு விசாரணை | -- | 24.06.2024 |

7) எதிரிகள் கு.வி.மு.ச பிரிவு 313 ன் கீழ் விசாரிக்கப்பட்ட நாள் - 26.05.2024

8) எதிரிகள் தலைமறைவாக இருந்த விபரம் -- --

9) மாண்புமிகு மேல் நீதிமன்ற தடை உத்தரவு விபரம் -- இல்லை

(ஓம்.திரு.பி.ஜெய்சங்கர்)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், ஆத்தூர்

<u>குறிப்பு</u>:-

1) விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.

2) சாட்சிகள் 3 வாய்தாக்களுக்கு மேல் நிறுத்திவைக்கப்படவில்லை.

3) தீர்ப்பு விபரம் காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

(ஓம்.திரு.பி.ஜெய்சங்கர்)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், ஆத்தூர்